www.tamilarangam.net

KUMAR S. DHEV
6090 FOSNAVÅG
Norway

# இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மறைவு குறித்து ஓர் ஆய்வுக்கட்டுரை:

இக் கட்டுரையின் நோக்கம் இந்திய அரசியற் களமும், இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளுக்கிடையேயான ஆளுமை/அரசியற்/பாதுகாப்பு என்பவற்றில் ஏற்படும் போட்டா போட்டி ஆகியவற்றுடன் வல்லரசுகளின் பங்களிப்பு போன்ற விடயங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தியா

இந்தியா பல இன/மொழி/மத/கலாச்சாரங்களையுடைய மாநிலங்களைக் கொண்ட தேசமாகும். இங்கு வாழும் மக்கள் பல்வேறு அபிலாசைகளை மாநிலத்தினுள்ளும், பிராந்தியவாரியாகவும், முரண்பட்முறையில் உள்ளது. இவற்றைப் பூர்த்தி செய்வதற்காக பல்வேறு முனைகளில் பல்வேறு வடிவங்களில்ப் போராடிக் கொண்டிருக்கின்றனர். அரசியல் வடிவங்களை ஆராயும் பொருட்டு இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பின்பு மத்தியில் பெரும்பாலும் நேரு குடும்பம் தனது அரசியல் ஆதிக்கத்தைக் கொண்டிருந்தபோதும் பிராந்தியங்களில்/மாநிலங்களில் பிராந்தியக் கட்சிகள் தோன்றின. இவற்றின் வளர்ச்சி கடந்த 10 வருடங்களுள் பிரமிக்கத்தக்கவகையில் பரிணமிக்கத் தொடங்கின. இதற்கு முக்கிய காரணங்களாக காங்கிரஸ் கட்சியின் உட்பூசலினால் பலபிரமுகர்கள் எதிரணியில் சேர்ந்ததும், பிராந்திய/மத/இன உணர்வுகள் அரசியலில் ஆதிக்கம் செலுத்தியதுமேயாகும்.
மாநிலவாரியாகப் பார்க்கும்போது குறிப்பிடத்தக்கவை பின்வருமாறு:

- வடஇந்திய மாநிலமான பஞ்சாப்பில் தனிநாட்டுக் கோரிக்கையுடன் அகாலிதளக் கட்சியும்.

- காஸ்மீரை பாகிஸ்தானுடன் இணைக்கக் கோரி முஸ்லீம் மதவாத காஸ்மீரிய விடுதலை முன்னணியும்.

- நாகலாந்தில் தனிநாடு கோரி நாகலாந்து விடுதலை முன்னணியும்.

- அசாம் மானிலத்தில் குடியேறிய வெளி மாநில/நாட்டு மக்களுக்கெதிராக கணபரிஷத்-அசாம் விடுதலை முன்னணியும்.

- தென்னிந்திய மாநிலமான ஆந்திரப்பிர தேசத்தில் மாக்சீயவாத நக்சலைட்டுக்களும்.

ஐக்கிய இந்தியாவிலிருந்து தனிநாடுகளாகப் பிரிந்து செல்வதற்காக அல்லது தமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு ஆயுதமேந்திப் போராடும் அமைப்புக்களாகும். இவற்றுக்கு பாகிஸ்தான், சீனா, ஏனைய வல்லரசுகள், மதவாத அமைப்புக்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ உதவி புரிகின்றன.

www.tamilarangam.net



இவற்றைவிட மத்தியில் கூட்டாகவோ/தனியாகவோ ஆட்சியமைக்கக் கூடிய முறையில் உள்ள பிரதான கட்சிகளாவன:

- அத்வானியைத் தலைவராகக் கொண்ட இந்துமதவாதப் பாரதீய ஜனதா(B.J.P) கட்சி.

- V.P சிங் தலைவராகவுள்ள ஜனதாத்தளம் கட்சி.

- ஜனதாத்தளத்திலிருந்து பிரிந்து சந்திரசேகர் தலமையிலுள்ள கட்சி.

- நேரு-காந்தி குடும்பத்தின் ஆளுமையில் உள்ள காங்கிரஸ்க் கட்சி.

இந்தியாவின் அரசியல் வரலாற்றில் முன் எப்போதுமில்லாதவாறு இத்தேர்தலில் அரசியற் கட்சிகளின் கொள்கைக்கு எவ்வித சம்பந்தமுமில்லாமல் பதவி ஒன்றை மாத்திரமே குறிகோளாக வேட்பாளர்களைத் தெரிவு செய்துள்ளது. பிரபலசினிமா நட்சத்திரங்கள், பணமுதலைகள், விபச்சாரிகள், கிரிமினல்க் குற்றவாளிகள் என்போரும் அடங்குவர். வெட்கப்படக்கூடிய விடயம் என்னவென்றால் பல அறிஞர்கள், அரசியல்வாதிகளை வழங்கிய இந்தியாவில் இன்று இப் பிரமுகர்கள் தாங்களாகவே ஒதுங்குகிறார்களா? அல்லது ஒதுக்கப்படுகிறார்களா? என்பது புரியாத புதிராகவே உள்ளது. அப்படிப் போட்டியிடும் ஒரு சில கொள்கைப் பற்றுள்ள வேட்பாளருக்கெதிராக மறு கட்சி மேற் கூறப்பட்ட அரசியலுக்குச் சிறிதும் சம்பந்தமில்லாத நபர்களை நிறுத்தி அவர்களைத் தோற்கடிக்க முனையுமளவுக்கு வன்மம் கொண்டுள்ளன.

முன்னைய தேர்தலில் 4 பாரளமன்ற இடங்களை மட்டுமே பெற்ற BJP கடந்த தேர்தலில் கிட்டத்தட்ட 90 ஆசனங்களைக் கைப்பற்றுமளவுக்கு இந்து மதவாதத்தைப் பயன்படுத்தியது/பயன்படுத்துகிறது. இதன் வளர்சியைக் கண்டு அதற்கு முகங்கொடுக்க முடியாமல் BJP தலைவர் அத்வானிக்கு எதிராக காங்கிரஸ்க் கட்சி சினிமாநடிகர் ராஜேஸ்கன்னாவை புதுடில்லியில் நிறுத்தியுள்ளது. பதவிக்கா இப்படிப் பல குறுக்கு வழிகளைக் இம்முறை பல தேசியக்கட்சிகள் பயன்படுத்துவது விசனத்துக்குரியது.
வட இந்தியமாநிலங்களில் இம்முறை BJP- காங்கிரஸ் கட்சிகளுக்கிடையேதான் கடும் போட்டி நிலவுவதாகக் கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன. தேர்தலில் BJP ஆட்சியைக் கைப்பற்றுமிடத்து நாட்டில் தனது மதவாதக் கொள்கைகளை நிலைநாட்டத் தயங்காது. இது நாட்டின் ஐக்கியத்திற்குப் பெரும் சவாலாகவே அமையும். இந்தியா 85% இந்துக்களைக் கொண்டிருந்த போதும் உலகிலேயே முஸ்லீம் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடுகளில் 2ம் இடத்தை வகிக்கிறது. சிறுபான்மையினரின் வாக்குககளைத் திரட்டுவதில் காங்கிரஸ்க் கட்சி, ஜனதாக்கட்சி என்பன தீவிர கவனம் செலுத்துகிறன.

www.tamilarangam.net


கடந்த தேர்தலில் காங்கிரஸ்க் கட்சி பெரும்பான்மை இடங்களைப் பெற்றபோதும் தனியாக ஆட்சி அமைக்கக் கூடிய பலம் பெருத நிலையில் ஜனதாக்கட்சி BJP யின் ஆதரவுடன் ஆட்சியமைத்து V P சிங் பிரதமஞர். இவர் தனது கட்சிக்குள்ளேயே பாரிய எதிர்ப்பின் மத்தியிலும் பிற்படுத்தோருக்குச் சலூகையளிக்கக் கூடிய திட்டத்தை கொண்டு வந்ததையடுத்து பாமரமக்களிடையே அவர் செல்வாக்குப் பெற்றுவிடுவாரோ என அஞ்சி BJP ராம ஜென்மப் பிரச்சினையைக்கிளப்பி பல இந்து-முஸ்லீம் உயிர்களைப் பலிவாங்கி தனது ஆதரவை வாபஸ் வாங்கியதன் மூலம் V P சிங்கின் ஆட்சி கவிழந்தது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ராஜீவ், ஜனதாக்கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து V P சிங்கை அகற்றும் பட்சத்தில் ஜனதாக்கட்சி தொடர்ந்து ஆட்சியமைக்கத் தனது ஆதரவைத்தருவதாகக் கூறிஞர். தனது வாழ் நாளில் ஒரு முறையேனும் பிரதமராாக வர ஏங்கியிருந்த சந்திரசேகருக்கு இது வரப்பிரசாதமாயமைந்தது. தன்னுடன் சில பா.உ அழைத்துக் கொண்டு ஜனதாத்தளத்தைப் பிளவுபடுத்தி காங்கிரஸ் ஆதரவுடன் பிரதமராஞர். மிகக் குறுகிய காலத்தினுள் காங்கிரஸ் ஆட்சியில் அல்லாத மாநிலங்களின் அரசுகளைக் கலைத்து காங்கிரஸ்க் கட்சியின் கைப்பொம்மையாகச் செயற்ப்பட்டார். கலைக்கப்பட்ட தமிழ் நாடு மாநிலத்தில் தி.மு.க 147 உறுப்பினர்களையும் காங்கிரஸ் 26 உறுப்பின்களையும் கொண்டிருந்தது. தி.மு.க அரசானது 13 வருட அரசியல் அஞ்ஞாதவாசத்தின் பின் ஆட்சியமைத்து 1 வருடம் மட்டுமே பூர்தியாயிருந்தது. தனது வேலைகளை சந்திரசேகர்மூலம் சாதுரியமாகச் சாதித்த காங்கிரஸ்க் கட்சி சிறுசம்பவம் ஒன்றைக் காரணங்காட்டி தனது ஆதரவை வாபஸ் வாங்கியதன் மூலம் சந்திர சேகர் ஆட்சி கவிழ்ந்து தற்போதைய தேர்தல் சூழ்நிலையை உருவாக்கியது. இருப்பினும் தற்போதைய காபந்துப் பிரதமர் பதவியில் உள்ள சந்திரசேகர் இத்தேர்தலில் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டமைக்க சுப்பிரமணியசுவாமி மூலம் முயற்சித்தும் கைகூடாததால் அக் கட்சி மீது அதிருப்தி கொண்டிருந்தார். இருந்தபோதும் ராஜீவின் மறைவுக்குச் சொற்ப காலத்துக்கு முன் பத்திரிகையில் வந்த செய்தியின்படி சந்திரசேகர் செப்ரெம்பர் மாதம்வரை பிரதமர் பதவியிலிருப்பார் என சந்திரசேகர் ஆச்சிரமம் மொன்றில் தரிசித்த சுவாமி ஒருவர் கூறியிருப்பது அரசியல் அவதானிகளிடம் பெரும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது காங்கிரஸ்க் கட்சியின் தலைவியாக சோனியா தெரிவாவதை மற்றைய அரசியற்கட்சிகள் எதிர்ப்பதன் மூலம் தமது காழ்ப்புணர்வை வெளிப்படுத்தியுள்ளன. இதைப் போலவே ஆந்திரப்பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த மூத்த அரசியல்வாதியான நரசிம்மராவ் தலைவராாக வருவதை குறுகிய வடக்குத் தெற்கு கண்ணேட்டத்துடன் பார்க்கும் காங்கிரஸ் கட்சியாலும் ஏற்க முடியவில்லை

www.tamilarangam.net



இந்தியாவும் அதன் அயல் நாடுகளும்:

இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் தமது ஆழுமையைச் செலுத்துவதற்கு அதன் அயல் நாட்டவருடன் கடும் போட்டியைச சந்திக்கவேண்டியுள்ளது. இதன் காரணமாக ஒவ்வொரு நாடும் தனது உளவாளிகளை மற்றையதன் நாட்டில் ஊடுருவிட்டிருப்பதால் அவற்றின் ஸ்த்திரத் தன்மை பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது.

பாகிஸ்த்தான்:
சீக்கிய/காஸ்மீரத் தீவிரவாதிகளுக்கு ஆயுதம்/பயிற்சி எற்பவற்றை வழங்குகிறது. அத்துடன் காஸ்மீரத்தை தனது ஆதிக்கத்தினுள் கொணடு வரமுயற்சிக்கிறது. இந்தியா இதுவரை இரு முறை இதனுடன் போர் புரிந்துள்ளது. பாகிஸ்தான் அணு ஆயுதங்களை இரகசியமாக உற்பத்தி செய்து வருவது இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாயுள்ளது.

சீனா:
இதனுடன் ஒருமுறை இந்தியா போரிலீடுபட்டது. அப்போது கைப்பற்றப்பட்ட நிலப்பரப்புக்கள் விடயத்தில் இதுவரை எந்தவிதமான இணக்கமும் காணப்படவில்லை.
சீனா தீபெத் நாட்டைக் கபளீரம் செய்தபோது இந்தியாவில் தஞ்சம் புகுந்த தலாய்லாமா அங்கிருந்தபடியே சீனாவிற்கு எதிராக அரசியல் நடத்துதல்.
சீனாவைப் போலவே தனது எல்லைப் பகுதிகளை ஸ்திரப்படுத்த இந்தியா பூட்டான், சீக்கிம், நேபாளம் ஆகியவற்றைத் தனது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்தது.

இலங்கை:
மலையகத்தமிழர் இலங்கையின் சுதந்திரத்தின் பின் குடியுரிமை மறுக்கபிபட்ட பிரச்சினையுடன் முதலில் இலங்கையில்த் தலையிட்ட இந்தியா பின்னர் இலங்கைத் தமிழர் பிரச்சினையிலும் தீவிர ஆர்வம் காட்டத் தொடங்கியது. இதற்கு முக்கிய காரணங்களாக இலங்கைத் தமிழருக்கா அனுதாபப்படும் இந்தியாவின் 50 மில்லியன் தமிழரின் உணர்வலைகளை எதிர் கொள்ள வேண்டிய சூழ்நிலை, மற்றும் தனது தென் பகுதி எல்லையின் கேந்திர முக்கியத்தையுமுணர்ததே காரணம். இந்திரா காந்தி பிரதமராயிருந்த காலகட்டத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினை தீவிரமடைந்தது. அந்நேரம் இந்தியா சோவித் சார்புக் கொள்கையையும் இலங்கை உட்பட அயல் நாடுகள் அமெரிக்க சார்புக் கொள்கையும் கொண்டிருந்தன.

www.tamilarangam.net



தமிழர் போராட்டத்தை இராணுவ முறையில் அடக்கிவிடத் தனது முப்படைகளையும் பயன்படுத்தியும் சமாளிக்கமுடியாமல் திணறிய இலங்கை அமெரிக்கா, சீனு, பாகிஸ்த்தான், இங்கிலாந்து, தென்னுபிரிக்கா போன்ற நாடுகளிடம் இராணுவ நிபுணரின் உதவி, ஆயுதத் தளபாடங்கள் என்பன்றைப் பெற்றது. அத்துடன் அமெரிக்காவின் ஆலோசனையுடன் இலங்கை இஸ்ரேலுடன் உறவுகளை வலுப்படுத்தி இராணுவ நிபுணர்/உபகரணங்களை பெற்று இஸ்ரேலின் நலன் காக்கும் பிரிவையும் அமைத்தது. இப்படியாக இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் வெளிச்சக்திகளின் ஊடுருவலைக் கண்டு அஞ்சிய பிராந்திய வல்லரசான இந்தியா, இலங்கையைத் தனது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வரும் எண்ணத்துடன் இலங்கைப் போராளிகளுக்கு ஆயுதப்பயிற்சி, ஆயுதம் எற்பவற்றை வழங்கியது. இந்திராவின் மறைவையடுத்து பதவியேற்ற ராஜீவ் தொடக்கத்தில் இலங்கைப் பிரச்சினையில் தாயாரைப் பின்பறியபோதும் ஆட்சியிலிருந்து போதிய அனுபவமின்மையால் வெளிநாட்டுக் கொள்கைகளில் தூரநேக்கின்றி பாரிய மாற்றங்களைக் குறுகிய காலத்தில்க் கொண்டு வந்தார்.

தீவிரமடைந்த இலங்கைப் பிரச்சினையில் உணவுப் பொட்டலங்களை விமானப்படை மூலம் அனுப்பி இந்தியா நேரடியாகத் தலையிட்டது. தொடர்ந்து தனது பாதுகாப்பை முதன்மைப்படுத்தி இலங்கைத் தமிழரின் விருப்பு வெறுப்புக்களைக் கவனத்திலெடுக்காமல் இலங்கையுடன் இந்தியா நேரடியாக ஒப்பந்தம் செய்து கொண்டது. இதன்படி அந்நிய சக்திகளை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதில் ஓரளவு வெற்றியும் கண்டது. ஒப்பந்தம் பற்றிப் பின்பு இராணுவ அதிகாரிகள் கூட்டம் ஒன்றில்க் கருத்துத் தெரிவித்த முன்னைய இலங்கைக்கான இந்தியத் தூதுவரும் ராஜதந்திரியுமான தீட்சித் இது இந்தியாவின் பாதுகாப்பை முதன்மைப்படுத்திச் செய்யப்பட்டதே அன்றி இலங்கைத் தமிழரின் அபிலாசைகளைக் கருத்திற் கொண்டு அல்ல எனக் குறிப்பிட்டார். தொடர்ந்து இந்திய இராணுவம் இலங்கை வருகை பிற்பாடு ஏற்பட்ட அரசியற் பின்னடைவுகள் இந்தியராணுவம் விடுதலைப் புலிகளிடை சண்டையை ஏற்படுத்தியது. இதற் இந்திய உளவு ஸ்தாபனம் RAW முக்கிய காரணமாயிருந்தது. இச்சண்டையில் 1500 மேற்பட்ட இந்திய வீரர்களும், 1000 விடுதலைப்புலிகளும், 6000 மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் உயிரிளந்து அவர்களது உடமைகள் நாசமாக்கப் பட்டமை கசப்பான உண்மைகளே. இதன்போது இந்திய சார்புத் தமிழர் குழுக்களை விடுதலைப் புலிகளுக் எதிராக இந்தியா பயன் படுத்தியதால் தமிழ்ப் போரளிகளுக் இடையேயான விரிசல் மேலும் வலுவடைந்தது. அடுத்து இந்திய/இலங்கை ஆட்சி மாற்றம் V P சிங்கை இந்தியாவிற்கும் பிரேமதாசாவை இலங்கைக்கும் ஆட்சிக்குக் கொண்டுவந்தது. விளைவு இந்தியப் படை வாபஸ் வாங்கப்பட்டது. இந்தியா தமக்கு ஆதரவளித்த தமிழ்க் குழுக்களைக் கைவிட்டது. அவர்களை இலங்கையரசு அரவணைத்து தனது சொந்த அரசியல் லாபத்திற்கு தற்போது பயன் படுத்துவதும் தெரிந்ததே.

தற்போதைய இந்தியத் தேர்தலில் ராஜீவ் வெற்றிபெற்ருல் பழைய ஒப்பந்தத்தை நடை முறைப்படுத்த முனைவார் எனவும் இலங்கை அச்சம் கொண்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. இதைப் போலவே வெளிச் சக்திகளும் ராஜீவின் (காந்தி குடும்ப)தலைமையில் இந்தியா வலுவடைந்துவிடும் என அச்சமடைந்தன.

www.tamilarangam.net

அத்துடன் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் தமது நாடுகளை எ்திர நிலமைக்குக் கொண்டு வர முனைந்த பல தலைவர்கள் மர்மமான முறையில் கொல்லப் பட்டதும் இதன் பின்னணிகள் இன்றுவரை மக்கள் முன்தெளிவாக்கப்படவில்லை என்பதும் முக்கியமானதாகும். இவர்கள் வரிசையில் மகாத்மா காந்தி, முன்னாள் இலங்கைப்பிரதமர் S.W.R.D பண்டாரநாயக்கா, பங்களாதேஸ் தலைவர் முஜிபூர் ரகுமானும் அவரது குடும்பத்தினரும், பாகிஸ்தான் தலைவர் அலி பூட்டோ, தொடர்ந்து சஞ்சாய் காந்தி, இந்திரா காந்தி, பாகிஸ்த்தான் தலைவர் ஜியா உல் கக், தற்போது ராஜீவ் காந்தியாகும். இவர்களின் மறைவு சில வல்லரசுகளுக்கு பெரும் அரசியல் ஆதாயத்தைத் கொடுத்தது என்பதில் ஐயமில்லை. ராஜீவின் மறைவையடுத்து ஆத்திரமடைந்த இத்திய மக்கள் அமெரிக்கத் தூதரகத்திற்கு முன் ஆர்பாட்டம் நடத்தியதாகவும் B.B.C நிருபர் கூறினார்.

தமிழ் நாட்டில் இச் சம்பவம் நடந்தபடியால் வீணாக விடுதலைப்புலிகள்மேலும் தமிழ்மக்கள் மீதும் சந்தேகத்தை ஏற்படுத்தி இலங்கைத் தமிழ் அகதிகளை வெளியேற்றவும் இலங்கை-இந்தியத் தமிழர் உறவில் விரிசல்களை ஏற்படுத்துவதன் மூலமும் அரசியல் லாபமடையக்கூடிய சக்திகள் யார் எறபதற்குக் காலம்தான் பதில் கூறவேண்டும்.

மேலும் கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் இலங்கைத் தமிழர் பிரச்சினை இந்தியாவின் அரசியற்கட்சிகளால் வாக்குச் சேகரிக்கப் பயறபட்டதே அன்றி இலங்கைத் தமிழ் மக்களோ அல்லது புலிகளோ இந்திய உள்நாட்டு அரசியலில் பங்கு பற்றியது கிடையாது. அத்துடன் ராஜீவின் மறைவிற்குச் சொற்ப காலத்திற்கு முன்புதான் புலிகள் காங்கிரஸ்க் கட்சியுடன் தமிழர் பிரச்சினை தொடர்பாக பேச்சு நடத்தியதாக B.B.C கூறுகிறது.

எனவே இச் சம்பவத்துடன் இலங்கைத் தமிழரைத் மாத்திரம் தொடர்புபடுத்தி புலன் விசாரணையை முன்னெடுத்தால் கொலைக்குப் பின்னணியில் உள்ளோரைத் தப்புவிக்கவே வழி சமைக்கும். எப்படியிருப்பினும் கடந்த காலங்களில் பட்ட அனுபவங்களின்படி இந்தியாவில் ஏற்படும் அரசியல் மாற்றங்களினால் இந்தியர்களை விடக் கடுமையாகப் பாதிக்கப்படுவது இலங்கைத் தமிழர்களே.

K.SIVASUNDARAM,
HOSPITAL GATA 6,
9950 VARDOE,
NORWAY.

(கட்டுரையில் உள்ள எழுத்து, அமைப்புப் பிழைகளுக்காக வருந்துகிறேன்)